මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## மக்கள் வங்கிக்காக வெளி நிறுவனங்கள் ஊடாக பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கான கேள்விப்பத்திரம் (2026/2028)

## கேள்விப்பத்திர இலக்கம் - P-145/2026

2026.10.01ஆம் திகதி முதல் 2029.09.30ஆம் திகதி வரை மக்கள் வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் அதைச் சுற்றி அமைந்துள்ள திணைக்களங்கள் /பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் அதற்குரிய கிளைகள் என்பவற்றிற்காக வெளி நிறுவனங்கள் ஊடாக பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைமை அலுவலகம் மற்றும் அதைச் சுற்றி அமைந்துள்ள திணைக்களங்கள் | 14. | மாத்தளை பிராந்தியம் |
| 2. | அம்பாறை பிராந்தியம் | 15. | மாத்தறை பிராந்தியம் |
| 3. | அநுராதபுர பிராந்தியம் | 16. | மொணராகல பிராந்தியம் |
| 4. | பதுளை பிராந்தியம் | 17. | நுவரெலியா பிராந்தியம் |
| 5. | மட்டக்களப்பு பிராந்தியம் | 18. | பொலனறுவை பிராந்தியம் |
| 6. | காலி பிராந்தியம் | 19. | புத்தளம் பிராந்தியம் |
| 7. | கம்பஹா பிராந்தியம் | 20. | இரத்தினபுரி பிராந்தியம் |
| 8. | அம்பாந்தோட்டை பிராந்தியம் | 21. | திருகோணமலை பிராந்தியம் |
| 9. | யாழ்ப்பாண பிராந்தியம் | 22. | வன்னி பிராந்தியம் |
| 10. | களுத்தற பிராந்தியம் | 23. | கொழும்பு வடக்கு |
| 11. | கண்டி பிராந்தியம் | 24. | கொழும்பு தெற்கு |
| 12. | கேகாலை பிராந்தியம் | 25. | கொழும்பு கிழக்கு |
| 13 | குருணாகல் பிராந்தியம் | 26. | கொழும்பு மேற்கு |

**ஏனைய நிபந்தனைகள்:-**

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2026.04.24ஆம் திகதி முதல் 2024.05.12ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக ரூ.5,000/- மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும்.

2. ஒழுங்காகத் தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரத்துடன் கேள்விப்பத்திரத்தின் வருடாந்த மதிப்பிடப்பட்ட செலவில் 3% பெறுமதியைக் கொண்ட விலைமனு பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு

கட்டளைகளை அல்லது வங்கி வரைவுகளைச் சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மக்கள் வங்கியின் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

3. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2026.05.14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மக்கள் வங்கி வழங்கல் திணைக்களம், இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். 2026.05.15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் மூடப்படுவதோடு, அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

4. மேற் குறிப்பிட்ட கேள்விப்பத்திரம் சம்பந்தமாக ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால் 2026.05.13ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பிரதம முகாமையாளர் அவர்களுக்கு அல்லது வழங்கல் திணைக்களத்திற்கு மின்னஞ்சல் (supplies@peoplesbank.lk) மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

5. பூர்வாங்க விலைமனு கோரும் கூட்டம் 2026.05.08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வழங்கல் திணைக்கள வளாகத்தில் நடைபெறும்.

6. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது கேள்விப்பத்திரத்தை இரத்துச்செய்யும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ள வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்


| | | |
|---|---|---|
| **பிரதம முகாமையாளர் (வழங்கல்)** | **தொலைபேசி இலக்கம்** | : 2439577/8, 2307326 |
| **மக்கள் வங்கி,** | **தொலைநகல்** | : 2439576 |
| **வழங்கல் திணைக்களம்,** | **இணையத்தளம்** | : www.peoplesbank.lk |
| **30/101, கியு வீதி, கொழும்பு 02.** | **மின்னஞ்சல்** | : supplies@peoplesbank.lk |